# நிறுத்திவைத்தல் வரிக் கூற்றுக்கான வழிகாட்டி

## வரிமதிப்பீட்டாண்டு 2018/2019

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, ஒவ்வொரு நிறுத்திவைத்தல் வரி முகவரும் (உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 86 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட வருடாந்தக் கூற்றொன்றினை (படிவ இல. Asmt WHT-001-ET) அட்டவணைகளுடன் சேர்த்து 2019 ஏப்பிரல் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக சமர்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றது.

நிறுத்திவைத்தல் வரிக்கான (நி.வை.வ) வருடாந்த கூற்றினையும் அட்டவணைகளையும் சமர்ப்பிக்கும் போது பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**1. நிறுத்திவைத்தல் வரிக் கூற்று மற்றும் அட்டவணைகளை சமர்ப்பித்தல்**

பின்வரும் முறைகளில் நி.வை.வரிக் கூற்றினையும் அட்டவணைகளையும் சமர்பிக்கலாம்.

**(அ) தபால்**

கீழ்வரும் முகவரிக்கு வருடாந்த கூற்று அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்

ஆணையாளர்

மத்திய ஆவண முகாமைத்துவ அலகு (CDMU)

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

த.பெ. இல 515

கொழும்பு 02

**(ஆ) நேரடியாக**

கூற்றானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (உ.இ.தி) தலைமை அலுவலக கட்டடத்தின் 1 ஆம் மாடியில் ம.ஆ.மு. அலகில் அல்லது எந்தவொரு பிராந்திய அலுவலகத்தில் அல்லது மெற்றோ கிளையில் நேரடியாக கையளிக்கலாம்

**(இ) இ-சேவையூடாக**

இ-சேவையூடாக கூற்றினை சமர்ப்பிக்க வசதிகள் இல்லாத போதும் **நி.வை.வ அட்டவணைகளை பதிவேற்றம் செய்வதற்க்கான வசதிகள் காணப்படுகின்றன.**

நி.வை.வரிக்கான **அட்டவணைகளை** சமர்ப்பிக்கும் போது பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டப்படுகின்றீர்கள்

அ. நி.வை.வரிக்கு பொறுப்புடைய நிறுத்திவைக்கப்பட்டவரின் மொத்த எண்ணிக்கை **20 இற்கு** மேற்பட்டதாக இருப்பின்

I. அட்டவணைகளை **இ-சேவையூடாக/முறைமையில்** பதிவேற்றுவதன் மூலம் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

II. உங்களிடம் இ-சேவை இல்லாதபட்சத்தில் நீங்கள் உங்கள் அட்டவணைகளை (மென் பிரதிகளை) உ.இ.தி தலைமை காரியாலயத்தின் கீழ் தளத்தில் அல்லது எந்தவொரு உ.இ.தி இன் பிராந்திய அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள **“நணசல”** வில் காணப்படும் இ-சேவையைப் பயன்படுத்தி நீங்களே சமர்ப்பிக்கலாம்

III. பதிவேற்றல் செயன்முறையில் உங்களுக்கு பரிச்சயம் இல்லையெனில் பொருத்தப்பாடுடைய அட்டவணைகளின் மென் பிரதியை உ.இ.தி தலைமை காரியாலயத்திற்கு கொண்டுவந்து உ.இ.தி **“நணசல”**விலுள்ள அல்லது எந்தவொரு உ.இ.தி **பிராந்திய அலுவலகத்திலுள்ள** உ.இ.தி உத்தியோகத்தரின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) நி.வை.வரிக்கு பொறுப்புடைய நிறுத்திவைக்கப்பட்டவரின் மொத்த எண்ணிக்கை **20 ஆக அல்லது அதற்கு குறைவாக** இருப்பின் நீங்கள் அட்டவணையின் வன்பிரதிகளை அல்லது மென்பிரதிகளை சமர்பிக்கலாம்

(இ) உ.இ.தி இணையத்தள வாயிலில் 01.04.2019ம் திகதியிலிருந்து அட்டவணை வார்புருக்கல் (templates) மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட அட்டவணை சரிபார்ப்பு கருவிகள் (verification tool) காணப்படுகின்றன.

(ஈ) உ.இ.தி இணைய நுழைவாயிலில் உங்கள் நி.வை.வ அட்டவணைகளை பதிவேற்றம் செய்த பின்னர் பெறப்படும் ஒப்புதல் தாளினை நிறுத்திவைத்தல் அட்டவணையுடன் இணைத்துக் கொள்ளுங்கள்.

(உ) பொருத்தப்பாடுடைய அட்டவணைகள் இன்றி கோவையிடுகின்ற எந்தவொரு ஆளொருவரும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வருடாந்த கூற்றொன்றினை சமபர்பிக்கவில்லை என கருதப்படுவர்.

**2. நிறுத்திவைத்தல் வரிக் கூற்றினை பூரணப்படுத்தல்**

**2.1 பகுதி I – 84 ஆம் பிரிவின் கீழ் வரும் கொடுப்பனவுகளுக்கான நிறுத்திவைத்தல் வரி**

84 ஆம் பிரிவின் பிரகாரம், நிறுத்திவைத்தல் வரியானது பங்குலாபம், வட்டி தள்ளுபடி, விதிப்பனவு, இயற்கை வளக் கொடுப்பனவு, வாடகை, அரசுரிமைப்பணம் கட்டுப்பணம், வெகுமதி லொத்தர், பந்தயம் அல்லது சூதாட்டம், பங்குடமை மற்றும் இரத்தினக்கல் ஏலவிற்பனை என்பனவற்றுக்கான கொடுப்பனவுகளை உள்ளடக்குதல் வேண்டும்.

**i. மொத்த கொடுப்பனவு (நிறுத்திவைத்தல் வரியைக் கழிப்பனவு செய்வதற்கு முன்னான தொகை)-**

செலுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவு – நி.வை.வ பொறுப்பல்லாத தொகை + நி.வை.வ. பொறுப்புள்ளத் தொகை

**ii. நிறுத்திவைத்தல் வரிக்கு பொறுப்பல்லாத் தொகை (ரூ)**

உ.இ. சட்டத்தின் 84 ஆம் பிரிவின் கீழ்வரும் கொடுப்பனவுகளில், இந்தப் பிரிவில் அல்லது ஏனைய பிரிவுகளின் கீழ் பொறுப்பல்லாத நி.வை.வ. கொடுப்பனவு விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்.
உதாரணமாக

1. சிரேஷ்ட பிரசை ஒருவருக்க ரூ 1.5 மி வரையிலான வட்டிக்கொடுப்பனவு
2. கூட்டுறவு சபை ஒன்றுக்கு செலுத்தப்படும் வாடகை

**iii. நிறுத்திவைத்தல் வரிக்கு பொறுப்புடைய தொகை**

நி.வை.வ கழிக்கப்பட்ட கொடுப்பனவின் மொத்தத் தொகை

**iv. நிறுத்திவைத்தல் வரிக்கு கழிக்கப்பட்டத் தொகை(ரூ)**

கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியின் மொத்தத் தொகை

**2.2 பகுதி II – 85 ஆம் பிரிவின் கீழ் வரும் கொடுப்பனவுகளுக்கான நிறுத்திவைத்தல் வரி**

85 ஆம் பிரிவின் பிரகாரம், நிறுத்திவைத்தல் கொடுப்பனவு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். (வதிவிட மற்றும் வதிவிடமற்ற நபரொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு)

(அ) கற்பித்தல் விரிவுரையாற்றல், பரிட்சித்தல், பரீட்சையொன்றைக் கண்காணித்தல் அல்லது மேற்பார்வையிடுதலுக்கான கொடுப்பனவு

(ஆ) வதிவுள்ள காப்புறுதி விற்பனைகள் அல்லது பிரச்சார முகவருக்கான தரகு அல்லது தரகுக்கூலிக்கான கொடுப்பனவு

(இ) புறக்குறிப்பிடல் கட்டணமொன்றுக்கான கொடுப்பனவு

(ஈ) கேள்வி மனு அல்லது விலைகோரல் ஊடாக ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பொருள் வழங்குதல் தொடர்பான சேவைக்கான கொடுப்பனவு

(உ) வைத்தியர்கள், பொறியிலாளர்கள் கணக்காளர்கள், சட்டத்தரணிகள், மென்பொருள் விருத்தி செய்வோர், ஆராய்ச்சியாளர்கள், கல்விமான்களுக்கு மற்றும் அதையொத்த சேவைகளுக்காக வழங்கப்பட்ட கொடுப்பனவு

(ஊ) ஏதேனும் நிருமான வேலை, பாதுகாப்பு சேவை கவனனிப்புச் சேவை ஏதேனும் வகைசார் ஆலோசனைச் சேவை, நிகழ்ச்சிகள் ஒழுங்கமைப்பு, உணவு,பான விநியோகம், வடிவமைப்பாளர்கள், ஆடை தயாரிப்பாளர்கள் அல்லது ஓர் ஒப்பந்த அடிப்படையில் அல்லது அத்தகைய சேவைகளுடன் தொடர்புள்ள வேறு வகையில் வழங்கப்படும் சேவைகளுக்கான கொடுப்பனவு

(எ) முகாமைத்துவ சேவைகள்

(ஏ) தனித்தியங்கும் சேவை வழங்குனர் என்றடிப்படையில் வழங்கப்பட்ட ஏதேனும் தொழில்சார் சேவைகளுக்கான கொடுப்பனவு

(ஐ) வதிவற்ற ஆளொருவருக்கு செலுத்தப்படும் சேவைக் கட்டணம் அல்லது காப்புறுதிக் கட்டணம்

(ஒ) வதிவற்ற ஆளொருவருக்கு செலுத்தப்படும் போக்குவரத்து அல்லது தொலைத் தொடர்பாடல் தொடர்பான சேவைக்கட்டணம்.

**(i) மொத்த கொடுப்பனவு ( நிறுத்திவைத்தல் வரியைக் கழிப்னவு செய்வதற்கு முன்னான தொகை)-**

செலுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவு – நி.வை.வ பொறுப்பல்லாத தொகை + நி.வை.வ. பொறுப்புள்ளத் தொகை

**(ii) நிறுத்திவைத்தல் வரிக்கு பொறுப்பல்லாத் தொகை (ரூ)**

உ.இ. சட்டத்தின் 85 ஆம் பிரிவின் கீழ்வரும் கொடுப்பனவுகளில், இந்தப் பிரிவில் அல்லது ஏனைய பிரிவுகளின் கீழ் பொறுப்பல்லாத நி.வை.வ. கொடுப்பனவு விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

1. 85ம் பிரிவின் கீழான கொடுப்பனவு, எனினும் ரூபா 50,000.00 விஞ்சவில்லை.
2. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 85(3)இன் கீழ் விலக்களிக்கப்பட்ட ஏதேனும் கொடுப்பனவுகள்.

**(iii) நிறுத்திவைத்தல் வரிக்கு பொறுப்புடைய தொகை**

நி.வை.வ கழிக்கப்பட்ட கொடுப்பனவின் மொத்தத் தொகை

**(iv) நிறுத்திவைத்தல் வரிக்கு கழிக்கப்பட்டத் தொகை(ரூ)**

கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியின் மொத்தத் தொகை

## 2.3 பகுதி III – நிறுத்திவைத்தல் வரிக்கான பொறுப்பு மற்றும் கொடுப்பனவுகள்

**கூடு 3.1** – வதிவிட நபர் ஒருவருடன் தொடர்புடைய நி.வை.வ இன் மொத்த தொகையானது கீழ்வரும் பிரிவுகளின் கீழ் மாதாந்த அடிப்படையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) வட்டியில் நி.வை.வ (இப் பகுதியின் மொத்த பெறுமதி 1 ஆம் அட்டவணையின் மொத்தப் பெறுமதிக்குச் சமனாக இருத்தல் வேண்டும்)

(ஆ) பங்குலாபத்தில் நி.வை.வ (இப் பகுதியின் மொத்த பெறுமதி 3 ஆம் அட்டவணையின் மொத்தப் பெறுமதிக்குச் சமனாக இருத்தல் வேண்டும்)

(இ) பங்குடமையில் நி.வை.வ (இப் பகுதியின் மொத்த பெறுமதி 2அ(2A) ஆம் அட்டவணையில் உள்ள பெறுமதிக்கு/களுக்குச் சமனாக இருத்தல் வேண்டும்)

(ஈ) ஏனையவற்றிலான நி.வை.வ (இப் பகுதியின் மொத்த பெறுமதி 2அ (2A) ஆம் அட்டவணையின் மொத்தப் பெறுமதிக்குச் சமனாக இருத்தல் வேண்டும் (இப் பகுதியின் மொத்த பெறுமதி (3.1 (இ)இல் குறிப்பிடப்பட்டத் தொகை தவிர்ந்த)

**குறிப்பு**

வங்கிகளும் நிதி நிறுவனங்களும் வதிவற்ற நபரொருவரின் வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரியின் கொடுப்பனவின் விபரங்களை 3.1 (அ) வில் குறிப்பிடலாம்

**கூடு 3.2** - வதிவற்ற நபரொருவரின் நி.வை.வ பொறுப்புக்களின் கூட்டுத்தொகையை இதில் குறிப்பிடப்படுதல் வேண்டும். இப் பகுதியின் மெத்தப் பெறுமதி அட்டவணை 2ஆ (2B) இன் பெறுமதிக்கு சமனாக இருத்தல் வேண்டும்)

3அ (3A) மற்றும் 3ஆ(3B) – பொறுப்புக்களை மாதாந்த அடிப்படையில் குறிப்பிடவும்

கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த வரி - மாதாந்தம் உ.இ.தி இற்கு செலுத்தப்பட்ட நிறுத்திவைத்தல் வரியின் பெறுமதியை குறிப்பிடவும்

## 2.4 பகுதி 4 – பிரகடனம்

வரி செலுத்துநரிடம் முழு நேர கடமையில் உள்ள ஊழியர் ஒருவர் தவிர்ந்து வேறு ஒருவரினால்– (அங்கீகாரம் பெற்ற கணக்காளர் ஒருவர் அடங்கலாக) கூற்று அல்லது கூற்றின் பகுதியொன்று பூரணப்படுத்தப்படும் போது பிரகடனத்தின் (அ) மற்றும் (ஆ) பகுதிகள் பூரணப்டுத்தப்படுதல் அத்தியாவசியமாகும்.

**பகுதி (அ)**

பகுதி (அ) இல் மற்றைய நபரின் (அங்கீகாரம் பெற்ற கணக்காளர் ஒருவர் அடங்கலாக) விபரங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி (ஆ)**

வரிசெலுத்துநர் அல்லது வரிசெலுத்துநரினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஒருவர் பிரகடணத்தின் பகுதி (ஆ) வினைப் பயன்படுத்தி விபரதிரட்டினை கையொப்பமிடுதல் வேண்டும்.

**3. நிறுத்திவைத்தல் வரி அட்டவணைகளைப் பதிதல்**

**3.1 நிறுத்திவைத்தல் வரி அட்டவணை 1 (வட்டி அல்லது தள்ளுபடியில் இருந்தான நிறுத்திவைத்தல் வரி)**

இந்த அட்டவணையை வட்டி அல்லது தள்ளுபடியை வழங்கிய ஒவ்வொரு நிறுவனமும் பூர்த்திசெய்தல் வேண்டும்.

1. *தொடர் இலக்கம்* - இந்த தொடரிலக்கம் 1 இலிருந்து ஆரம்பித்துச் செல்ல வேண்டும் எவ்வேளையிலும் ஒரே இலக்கத்தை இரண்டு முறை பதிவு செய்வதை தவிர்க்கவும். கொள்ளளவுப் பிரச்சினை காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட கோப்புகளை பூர்த்தி செய்திருப்பின் அடுத்துவருவனவற்றுக்கு சரியான தொடரிலக்கத்தை பின்பற்ற வேண்டும்.
2. *முதலீட்டு வகை* – கீழே கொடுக்கப்பட்ட முதலீடுகளில் உங்களுக்கு பொருத்தமான முதலீட்டைத் தேர்ந்தெடுக்கவும் அதே வேளை அட்டவணையைப் பூர்த்தி செய்யும் பொழுது இதிலுள்ள பொருத்தமான ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தவும்.

   நிலையான வைப்புக்கள் FIXED DEPOSIT

   சேமிப்புக்கள் SAVINGS

   தொகுதிக்கடன்கள் DEBENTURES

   வணிகப்பத்திரங்கள்/வாக்குறுதிச் சீட்டுகள் COMMERCIAL PAPERS/PROMISSORY NOTES

   வெளிநாட்டு நாணயத்திலான கணக்குகள் FOREIGN CURRENCY ACCOUNTS

   திறைசேரி பிணையங்கள் உண்டியல்கள்/முறிகள் TREASURY BONDS/BILLS/SECURITIES

   நிதியங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் INVESTMENT IN FUNDS

   வியாபாரக் கடன்கள் BUSINESS LOAN

   ரிபோ REPO

   ஏனையவை OTHERS
3. *நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர்* - இங்கு நிறுத்திவைத்தல் வரிக்குரியவரின் பெயரை ஆங்கிலத்தில் குறிப்பிடவும். பெயர் உச்சளவாக 100 எழுத்துக்களை மட்டுமே கொண்டிருக்க முடியும்.
4. *நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி* – நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரியைக் குறிப்பிடவும். முகவரியை ஆங்கிலத்தில் குறிப்பிடவும். அதேவேளை காற்புள்ளிகள் பயன்படுத்த வேண்டாம். முகவரி உச்சளவாக 100 எழுத்துக்களை மாத்திரமே கொண்டிருக்க முடியும்.
5. *நிறுத்திவைக்கப்பட்டவரின் வரிசெலுத்துனர் அடையாள இலக்கம்* - இங்கு நிறுத்திவைத்தல் வரிக்குரியவரின் வரிசெலுத்துனர் அடையாள இலக்கத்தைக் குறிப்பிடவும். வரிக்குரியவர் வரிசெலுத்துனர் அடையாள இலக்கத்தை வழங்கவில்லை எனில் அவ்விடத்தை வெற்றிடமாக விடுங்கள்.
6. *கணக்கு இலக்கம்/சான்றிதழ் இலக்கம்* - இங்கு கணக்கிலக்கம் இருப்பின் கணக்கிலத்தினையும் அல்லது சான்றிதழ் இலக்கத்தினைக் குறிப்பிடவும். இலக்கம் உச்சளவாக 30 எழுத்துக்களை மாத்திரமே கொண்டிருக்க முடியும்.
7. *முதலீட்டுப் பெறுமதி (ரூ)* - இந்த வரிமதிப்பீட்டாண்டில் வழங்கிய வட்டிக்கான முகப்பெறுமதியை குறிப்பிடவும். மாதாந்தம் வட்டி வழங்கப்பட்டிருந்தால் அம் மாதம் வழங்கிய வட்டிக்கான முகப்பெறுமதியைக் குறிப்பிடவும்
8. *கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டி/தள்ளுபடியின் பெறுமதி (ரூ)* - இந்த வரிமதிப்பீட்டாண்டில் வழங்கிய வட்டியின் பெறுமதி மாதாந்தம் வட்டி வழங்கப்பட்டிருந்தால் அம் மாதம் வழங்கிய வட்டியினனைக் குறிப்பிடவும். இலக்கம் உச்சளவாக 15 இலக்கங்களை (இரு தசம புள்ளிகள் அடங்கலாக) கொண்டிருத்தல் வேண்டும்.
9. *நி.வை.வ வீதம் (%)* – நிறுத்திவைக்கப்பட்ட வரிக்காக பிரயோகிக்கப்பட்ட வீதத்தைக் குறிப்பிடவும்
10. *கழிக்கப்பட்ட நி.வை.வ (ரூ)* – நிறுத்திவைக்கப்பட்ட வரியின் பெறுமதியைக் (இரண்டு தசம தானங்களுக்கு) குறிப்பிடவும்
11. *நி.வை.வ சான்றிதழ் இலக்கம்* - இங்கு உங்களால் வழங்கப்பட்டுள்ள நிறுத்திவைத்தல் வரிச் சான்றிதழ் இலக்கத்தைக் குறிப்பிடவும். நிறுத்திவைக்கப்பட்வருக்கு உங்களால் சான்றிதழ் வழங்கப்பவில்லை எனில் அதனை வெற்றிடமாக விடுங்கள். இலக்கம் உச்சளவாக 30 எழுத்துக்களை மாத்திரமே கொண்டிருக்க முடியும்.
12. *மொத்தம்* - இறுதியில் நிரல் 10 இன் கூட்டுத் தொகையை எழுதவும்.

குறிப்பு

(1) தனிப்பட்டவர்களின் விபரங்களை மொத்தமாக தனியொரு வரியில் வழங்கவும் தனித்தனியாக தெரிவிக் தேவையில்லை.

(2) வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்குகள் தொடர்பாக வழங்கிய வட்டிகள் வழங்கிய தினத்தில் காணப்பட்ட இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு மாற்றப்படுதல் வேண்டும்

(3) வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் இதே அட்டவணையில் வட்டி தொடர்பில் வதிவற்ற நிறுத்திவைக்கப்பட்டோரின் விபரங்களை தருதல் வேண்டும்.

**3.2 நிறுத்திவைத்தல் வரி அட்டவணை 2 அ மற்றும் 2 ஆ**
**84 மற்றும் 85 ஆம் பிரிவுகளின் கீழ் வதிவுள்ள மற்றும் வதிவற்ற நபர்களுக்கு மேற்கொள்ளப்படும் வட்டி, தள்ளுபடி அல்லது பங்குலாபம் தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகள் மீதான நிறுத்திவைத்தல்**

2 அ - வதிவுள்ள நபர்

2 ஆ – வதிவற்ற நபர்

1. *தொடர் இலக்கம்* - இந்த தொடரிலக்கம் 1 இலிருந்து ஆரம்பித்துச் செல்ல வேண்டும் எவ்வேளையிலும் ஒரே இலக்கத்தை இரண்டு முறை பதிவு செய்வதை தவிர்க்கவும். கொள்ளளவுப் பிரச்சினை காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட கோப்புகளை பூர்த்தி செய்திருப்பின் அடுத்துவருவனவற்றுக்கு சரியான தொடரிலக்கத்தை பின்பற்ற வேண்டும்.
2. *கொடுப்பனவு வகை* – கீழே கொடுக்கப்பட்ட கொடுப்பனவுகளில் உங்களுக்கு பொருத்தமான முதலீட்டைத் தேர்ந்தெடுக்கவும் அட்டவணையைப் பூர்த்தி செய்யும் பொழுது இதிலுள்ள பொருத்தமான ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தவும்

   விதிப்பனவு CHARGE

   இயற்கை வளக் கொடுப்பனவு NATURAL RESOURCE PAYMENT

   வாடகை RENT

   அரசுரிமைப்பணம் ROYALTY

   கட்டுப்பணம் PREMIUM

   வெகுமதி, லொத்தர், பந்தயம் அல்லது சூதாட்டம் WINNINGS FROM LOTTERY/ REWARD/ BETTING OR GAMBLING

   பங்குடமை PARTNERSHIP INCOME

   இரத்தினக்கல் ஏலவிற்பனை GEM AUCTION

   குற்பித்தல் அல்லது விரிவுரையாற்றல் TEACHING OR LECTURING

   பரீட்சித்தல் அல்லது பரீட்சையொன்றைக் கண்காணித்தல் அல்லது மேற்பார்வையிடுதலுக்கன கொடுப்பனவு EXAMINING OR INVIGILATING OR SUPERVISING COMISSION

   புறக்குறிப்பிடல் கட்டணம் ENDORSEMENT FEE

   பண்ட வழங்குதல் தொடர்பான சேவை SERVIVE OF SUPPLY OF ANY ARTICLE

   தனிப்பட்ட நபரினால் வழங்கப்படும் சேவை INDEPENDENT SERVICE PROVIDING

   நிருமான சேவை CONTRACTION SERVICE

   பாதுகாப்பு சேவை SECURITY SERVICE

   கவனிப்புச் சேவை JANITORIAL SERVICE

   ஆலோசனைச் சேவை CONSULTATION WORK

   நிகழ்ச்சிகள் ஒழுங்கமைப்பு சேவை ORGANIZING OF EVENT SERVICE

   உணவுபான விநியோக சேவை CATERING SERVICE

   வடிவமைப்பு மற்றும் ஆடை தயாரிப்பு சேவை DESIGNING AND DRESS MAKING SERVICE

   சுற்றுலா வழிகாட்டல் சேவை TOUR GUIDANCE SERVICE

   களியாட்ட சேவை ENTERTAINMENT SERVICE

   முகவர் AGENCY FUNCTIONS

   முகாமைத்துவ சேவை MANAGEMENT SERVICE

   வுாழ்க்கைத் தொழில்கசார் சேவை VOCATIONAL SERVICE

   வுதிவற்ற ஆளொருவருக்கு செலுத்தப்படும் சேவைக் கட்டணம் அல்லது காப்புறுதிக் கட்டணம் SERVICE FEE OR INSURANCE PREMIUM PAYMENT TO NONRESIDENT PERSON

   வுதிவற்ற ஆளொருவருக்கு செலுத்தப்படும் போக்குவரத்து அல்லது தொலைத் தொடர்பாடல் தொடர்பான சேவைக் கட்டணம் LAND, SEA OR AIR TRANSPORT OR TELECOMMUNICATION SERVICE PAYMENT TO NONRESIDENT

   ஏனையவை OTHERS

   தனித்தியங்கும் சேவை வழங்குனர் என்றடிப்படையில் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைகளுக்கான கொடுப்பனவு
3. *நிறுத்திவைக்கப்பட்டவரின் பெயர்* - இங்கு நிறுத்திவைத்தல் வரிக்குரியவரின் பெயரை ஆங்கிலத்தில் குறிப்பிடவும். பெயர் உச்சளவாக 100 எழுத்துக்களை மட்டுமே கொண்டிருக்க முடியும்.

4. (அ) *நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரி* (அட்டவணை 2 அ விற்க்காக) – நிறுத்திவைக்கப்பட்டவரின் முகவரியை ஆங்கிலத்திலத்தில் குறிப்பிடவும். காற்புள்ளிகள் பயன்படுத்த வேண்டாம். முகவரி உச்சளவாக 100 எழுத்துக்களை மாத்திரமே கொண்டிருக்க முடியும்.

   (ஆ) *நிறுத்திவைக்கப்பட்டவரின் நாடு* (அட்டவணை 2 ஆ விற்க்காக) – நிறுத்திவைக்கப்பட்டவரின் நாட்டை ஆங்கிலத்தில் குறிப்பிடவும். முகவரி உச்சளவாக 100 எழுத்துக்களை மாத்திரமே கொண்டிருக்க முடியும்.
5. நிறுத்திவைக்கப்பட்டவரின் வரிசெலுத்துனர் அடையாள இலக்கம் - இங்கு நிறுத்திவைத்தல் வரிக்குரியவரின் வரிசெலுத்துனர் அடையாள இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டைஇலக்கத்தைக் குறிப்பிடவும். வரிக்குரியவர் வரிசெலுத்துனர் அடையாள இலக்கத்தை வழங்கவில்லை எனில் அவ்விடத்தை வெற்றிடமாக விடுங்கள். வதிவற்ற நபரொருவருக்கு இலங்கை உ.இ.தி இன் சர்வதேச அலகினால் வழங்கப்பட்ட வ.அ.இ இனைப் பயன்படுத்தலாம்.
6. *மாதத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் எண்ணிக்கை* – ஒரே ஆளொருவருக்கு ஒரு மாதத்திளுள் பல கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த ஆளுக்கு அந்த மாதத்திற்கு ஒரு நிறுத்திவைத்தல் வரிச் சான்றிதழ் மட்டும் வழங்கப்பட்டிருப்பின் அந்த மாதத்தினுள் அந்த ஆளுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் எண்ணிக்கையினை எழுதுக. அதே வேளை ஒரே ஆளொருவருக்கு ஒரு மாதத்தினுள் பல கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த ஆளுக்கு அந்த மாதத்திற்கு ஒவ்வொரு கொடுப்பனவுக்கும் நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பின் அந்த மாதத்தினுள் அந்த ஆளுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளைத் தனித்தனியாக குறிப்பிடுவதனால் எண்ணிக்கையை ஒன்று என எழுதுக.
7. *கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்தத் தொகை (ரூ)* – ஆளொருவருக்கு வழங்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி சான்றிதடுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவின் (வரிகள் உள்ளடங்கலாக) முழுப் பெறுமதி
8. *நி.வை.வ வீதம் (%)* - நிறுத்திவைக்கப்பட்ட வரிக்காக பிரயோகிக்கப்பட்ட வீதத்தைக் குறிப்பிடவும்.
9. *கழிக்கப்பட்ட நி.வை.வ (ரூ)* - நிறுத்திவைக்கப்பட்ட வரியின் பெறுமதியைக் குறிப்பிடவும். இது (2 தசம புள்ளிகள் அடங்கலாக) அதிகபட்சம் 15 இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும்
10. *நி.வை.வ சான்றிதழ் இலக்கம்* - நிறுத்திவைத்தவருக்கு உங்களால் வழங்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரிச்சான்றிதழ் இலக்கத்தைக் குறிப்பிடவும். வதிவற்ற நபரொருவருக்கு remittance clearance இலக்கத்தை நிறுத்திவைத்தல் சான்றிதழ் இலக்கமாக குறிப்பிடவும். நிறுத்திவைக்கப்பட்வருக்கு உங்களால் சான்றிதழ் வழங்கப்பவில்லை எனில் அதனை வெற்றிடமாக விடுங்கள். இது அதிகபட்சமாக 30 இலக்கங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்
11. *மொத்தம்* - இறுதியில் நிரல் 10 இன் கூட்டுத் தொகையை எழுதவும்.

### 3.3 **நிறுத்திவைத்தல் வரி அட்டவணை 3** பங்குலாபங்களில் இருந்தான நிறுத்திவைத்தல் வரி

இந்த அட்டணையை பங்குலாபங்களை வழங்கிய ஒவ்வொரு நிறுவனமும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

1. *தொடர் இலக்கம்* - இந்த தொடரிலக்கம் 1 இலிருந்து ஆரம்பித்துச் செல்ல வேண்டும் எவ்வேளையிலும் ஒரே இலக்கத்தை இரண்டு முறை பதிவு செய்வதை தவிர்க்கவும். கொள்ளளவுப் பிரச்சினை காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட கோப்புகளை பூர்த்தி செய்திருப்பின் அடுத்துவருவனவற்றுக்கு சரியான தொடரிலக்கத்தை பின்பற்ற வேண்டும்.
2. *பங்குதாரர் வகை* – கீழே தரப்பட்ட நிரலில் இருந்து பொறுத்தமான பங்குதாரரை தெரிவு செய்யவும்.
   - *கம்*பனி COMPANY
   - தனிநபர் INDIVIDUL
   - *ஏனையோர்* OTHERS
3. விநியோகிக்கப்பட்ட திகதி – பங்குலாபம் விநியோகிக்ப்பட்ட திகதி வவவவ-மாமா-திதி முறை பின்பற்றப்பட வேண்டும்
4. *விநியோகிக்கப்பட்ட மொத்த பங்குலாபங்களின் பெறுமதி (ரூ)* – விநியோகிக்கப்பட்ட பங்குலாபங்களின் மொத்தப் பெறுமதி. இரண்டு தசமபுள்ளிகள் உள்ளடங்கலாக இது அதிகபட்சம் 15 இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும்
5. *வரிக்கு உள்ளடக்ப்படாத தொகை* (ரூ) – வரிக்கு உள்ளடக்கப்படாத தொகையைக் குறிபிடவும். இரண்டு தசமபுள்ளிகள் உள்ளடங்கலாக இது அதிகபட்சம் 15 இலககங்களை கொண்டிருத்தல் வேண்டும்
6. *வரிக்கு விலக்களிக்கப்பட்ட பங்குலாபம் (ரூ)* - வரிக்கு விலக்களிக்கப்பட்ட தொகையைக் குறிப்பிடவும். இரண்டு தசமபுள்ளிகள் உள்ளடங்கலாக இது அதிகபட்சம் 15 இலக்கங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. *பொறுப்புடைய தொகை* – நிறுத்திவைத்தல் வரிக்கு பொறுப்புடைய தொகை. இது அதிகபட்சம் 15 இலக்கங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
8. *நி.வை.வ. வீதம் (%)* - நிறுத்திவைக்கப்பட்ட வரிக்காக பிரயோகிக்கப்பட்ட வீதத்தைக் குறிப்பிடவும்

9. *கழிக்கப்பட்ட நி.வை.வ (ரூ)* – நிறுத்திவைக்கப்பட்ட வரியின் பெறுமதியைக் (இரண்டு தசம தானங்களுக்கு குறிப்பிடவும்)
10. **மொத்தம்** - 9 ஆம் நிரலின் கூட்டுத்தொகை

**குறிப்பு**

நிறுத்திவைக்கப்பட்டோரின் விபரங்கள் தனித்தனியாக உள்ளடக்கத் தேவையில்லை. தனிப்பட்ட நபர்கள், கம்பனிகள். வுதிவற்ற ஆள் மற்றும் ஏனையவரக்ளுக்கு வழங்கிய பங்குலாபங்களை அவர்களுக்குரிய வரிசைகளில் மொத்தமாக குறிப்பிடவும். ஒனறுக்கு மேறபட்ட பங்குலாப விநியோகங்கள் இருப்பின் அவற்றினை திகதிகளின் அடிப்படையில் வேறாகக் குறிப்பிடவும்.

**4. சீராக்கல் அட்டவணை**

உ.இ.தி இற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் சீராக்கங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதனை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சீராக்கல் அட்டவணையைப் புர்த்தி செய்து சமர்பிக்கவும்.

நி.வை.வ சீராக்கல் அட்டவணை

| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|---|
| சீராக்கப்பட்ட மாதம் | கொடுப்பனவு வகை | நிறுத்தி வைக்கப்பட்டோர் | | | நிறுத்தி வைக்கப்பட்ட தொகை | நிறுத்தி வைக்கப்பட்ட மாதம் | நிறுத்தி வைக்கப்பட்டவருக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை | மீள் செலுத்துகைக்கான காரணம் |
| | | பெயர் | முகவரி | வ.அ.இ/ தே.அ.இ | | | | |
| | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |

**5. கொடுப்பனவு முறை**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட கொடுப்பனவு நறுக்குகளைப் பயன்படுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும்.

அத்துடன் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பொழுது கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு ‘கொடுப்பனவு வரி வகைக் குறியீடு’ மற்றும் ‘கொடுப்பனவு செய்ய வேண்டிய வங்கி’ தொடர்பாக கவனம் கொள்ளுங்கள்.

| **நிறுத்திவைத்தல் வரி வகை** | **கொடுப்பனவு செய்ய வேண்டிய வரி வகைக் குறியீடு** | **கொடுப்பனவு செய்ய வேண்டிய வங்கி** |
|---|---|---|
| பங்குலாபம் மீதான நிறுத்திவைத்தல் வரி | 04 | இலங்கை வங்கி |
| பங்குடமை வருமானம் மீதான நிறுத்தி வைத்தல் வரி | 09 | இலங்கை வங்கி |
| வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி | 43 | மக்கள் வங்கி (கொடுப்பனவு வவுச்சர் இலக்கம் கட்டாயமானது) |
| ஏனைய சேவைகள் அல்லது முதலீடுகளில் இருந்தான வருமானங்கள் மீதான நிறுத்திவைத்தல் வரி | 44 | மக்கள் வங்கி (கொடுப்பனவு வவுச்சர் இலக்கம் கட்டாயமானது) |
| வதிவற்றவர் அல்லது வதிவற்றவர் சார்பாக கொடுப்பனவு செய்யப்பட்ட நிறுத்திவைத்தல் வரி | 12 | இலங்கை வங்கி |

நீங்கள் ஏதேனும் இடர்களை சந்தித்தால்,

- முறைமை செயற்பாட்டின்மை – 1944 இலக்கத்தினை அழைத்து உ.இ.தி உடன் தொடர்பை ஏற்படுத்துவதுடன் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது குரல் பதிவை மேற்கொண்டு சிட்டை இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும்
- பிரச்சினையை பதிவேற்றம் செய்தல்: 0112134162 அல்லது 0112134753 இனை அழுத்தி மத்திய தரவு முகாமைத்துவ அலகை தொடர்பு கொள்ளவும்
- அட்டவணையை சரிபார்கரும் பிரச்சினை தொடர்பில் - 0112134162 அல்லது 0112134753 இலக்கங்களை அழுத்தி மத்திய தரவு முகாமைத்துவ அலகினை தொடர்பு கொள்ளவும்.